## <u>சுருக்கம்</u>

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை – பயிற்சிப் பிரிவு – திட்டம் – மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின்அறிவிப்புகள் – அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி தனியார் தொழிற்பயிற்சி மையங்களில் சிறப்பாகப் பணிபுரியும், முதல்வர் மற்றும் பயிற்றுநர்களுக்கு இந்த ஆண்டு முதல் நல்லாசிரியர் விருது வழங்க – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (எஸ்.1) துறை</u>

அரசு ஆணை (டி) எண்.413 நாள்.12.7.2010

படிக்க:–

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையரின் கடித எண். திட்டம்.3/6890/2010–6, நாள்.17.5.2010.

---------

<u>ஆணை:–</u>

தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் 30.4.2010 அன்று நடைபெற்ற தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறைக்கான மானியக் கோரிக்கை எண்.32–ல் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் கீழ்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

> "அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பணிபுரியும் முதல்வர் / பயிற்றுநர்களுக்கு அவர்களின் சிறப்பான பணியினைப் பாராட்டி, வருடந்தோறும் நல்லாசிரியர் விருது வழங்கப்பட்டு வருவது போல், அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி தனியார் தொழிற்பயிற்சி மையங்களில் சிறப்பாகப் பணிபுரியும், முதல்வர் மற்றும் பயிற்றுநர்களுக்கு இந்த ஆண்டு முதல் நல்லாசிரியர் விருது வழங்கப்படும்."

2. இது குறித்து, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், பள்ளிக் கல்வித் துறையில் உள்ளது போலவும், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையில் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலைய முதல்வர் மற்றும் பயிற்றுநர்களுக்கு வழங்குவது போலவும் , தமிழ்நாட்டில் உள்ள அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி தனியார் தொழிற் பயிற்சி மையங்களில் சிறப்பாகப் பணிபுரியும் முதல்வர் மற்றும் பயிற்றுநர்களுக்கு பணி அனுபவம், வருகை, ஒழுக்கம், நல்ல நடத்தை, கருவிகள் மற்றும் தளவாடங்கள் நல்ல முறையில் பராமரித்தல், சிறந்த முறையில் பயிற்சியளிக்கும் திறமை போன்றவற்றின் அடிப்படையில் பயிற்சி அளிக்கும் ஆர்வத்தினை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில் "நல்லாசிரியர் விருது" தலா ரூ.1000/– மதிப்புள்ள கிசான் விகாஸ் பத்திரம் மற்றும் தகுதி சான்றிதழ், 2 முதல்வர்கள், 2 பயிற்சி அலுவலர்கள் , 4 உதவி பயிற்சி அலுவலர்கள் மற்றும் 4 இளநிலை பயிற்சி அலுவலர்கள் ஆகியோருக்கு வழங்கலாம் என்றும், இதற்கான தொடரும் செலவினம் ஆண்டுக்கு ரூ.12,000/– ஆகும் எனவும் தெரிவித்துள்ளார்.

**3.** மேலும், அவர் அரசு தொழிற்பயிற்சி நிலைய ‘‘நல்லாசிரியர் தேர்வு’’ செய்யும் குழுக்களே, அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி தனியார் தொழிற்பயிற்சி மையங்களில் சிறப்பாகப் பணிபுரியும் முதல்வர் மற்றும் பயிற்றுநர்களுக்கான நல்லாசிரியர் தேர்வையும் மேற்கொள்ளலாம் எனவும், இதற்காக தற்போது கடைப்பிடிக்கப்படும் நடைமுறைப்படியே தேர்வு மேற்கொள்ளலாம் எனவும், மண்டல அளவில் தேர்வு செய்து மாநிலக் குழு மூலம் நல்லாசிரியர் விருது வழங்குவதற்கான ஆணையினையும், அவர்களுக்கு வழங்கப்படும் நல்லாசிரியர் விருதிற்கான ரொக்கப்பணம், ரூ.1000/–க்கான கிசான் விகாஸ் பத்திரமாக மாற்றி வழங்கிடவும், பாராட்டுச் சான்றிதழ் வழங்கிடவும் ஆணை வழங்குமாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

**4.** மேற்கண்ட செயற்குறிப்பை அரசு கவனமாக பரிசீலித்து, பரிசீலனைக்குப்பின், பள்ளிக் கல்வித் துறையில் உள்ளது போலவும், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையில் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலைய முதல்வர் மற்றும் பயிற்றுநர்களுக்கு வழங்குவது போலவும் , தமிழ்நாட்டில் உள்ள அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி தனியார் தொழிற் பயிற்சி மையங்களில் சிறப்பாகப் பணிபுரியும் முதல்வர் மற்றும் பயிற்றுநர்களுக்கு பணி அனுபவம், வருகை, ஒழுக்கம், நல்ல நடத்தை, கருவிகள் மற்றும் தளவாடங்கள் நல்ல முறையில் பராமரித்தல், சிறந்த முறையில் பயிற்சியளிக்கும் திறமை போன்றவற்றின் அடிப்படையில் பயிற்சி அளிக்கும் ஆர்வத்தினை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில் “நல்லாசிரியர் விருது” தலா ரூ.1000/– மதிப்புள்ள கிசான் விகாஸ் பத்திரம் மற்றும் தகுதி சான்றிதழ், 2 முதல்வர்கள், 2 பயிற்சி அலுவலர்கள், 4 உதவி பயிற்சி அலுவலர்கள் மற்றும் 4 இளநிலை பயிற்சி அலுவலர்கள் ஆகியோருக்கு இந்த ஆண்டு முதல் வழங்கலாம் என்றும்; அரசு தொழிற்பயிற்சி நிலைய ‘‘நல்லாசிரியர் தேர்வு’’ செய்யும் குழுக்களே, அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி தனியார் தொழிற்பயிற்சி மையங்களில் சிறப்பாகப் பணிபுரியும் முதல்வர் மற்றும் பயிற்றுநர்களுக்கான நல்லாசிரியர் தேர்வையும் மேற்கொள்ளலாம் எனவும், இதற்காக தற்போது கடைப்பிடிக்கப்படும் நடைமுறைப்படியே தேர்வு மேற்கொள்ளலாம் எனவும், மண்டல அளவில் தேர்வு செய்து மாநிலக் குழு மூலம் நல்லாசிரியர் விருது வழங்குவதற்கான ஆணையினையும், அவர்களுக்கு வழங்கப்படும் நல்லாசிரியர் விருதிற்கான ரொக்கப்பணம், ரூ.1000/–க்கான கிசான் விகாஸ் பத்திரமாக மாற்றி வழங்கிடவும் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கிடவும் அரசு ஆணை வெளியிடுகிறது.

**5.** நல்லாசிரியர் விருது வழங்குவதற்கான தொடரும் செலவினம் ஆண்டுக்கு ரூ.12,000/– ஆகும். இச்செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

> “2230. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு 03 பயிற்சி 101 தொழிற் பயிற்சி நிறுவனங்கள் – II திட்டத்தில் சேராதது – AC தொழிற் பயிற்சி நிலையத்தில் உள்ள சிறந்த பயிற்சி ஆசிரியருக்கும் சிறந்த பயிற்சி மாணவருக்கும் முதலமைச்சர் விருது வழங்குதல் – 59 பரிசுகளும் வெகுமதிகளும்.
>
> ( த.தொ.கு 2230.03.101.AC.5904 ) ”.

**6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண்.99/JS (PM)/2010, நாள்.8.7.2010–ன்படி வெளியிடப்படுகிறது.**

(ஆளுநரின் ஆணைப்படி)

**த. பிரபாகர ராவ்,**
அரசு முதன்மைச் செயலாளர்

**பெறுநர்**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர், சென்னை.32.**
**மாநில கணக்காயர், சென்னை–18**
**மாநில கணக்காயர், சென்னை–18 (பெயரில்)**
**மாநில கணக்காயர், (சி.ஏ.எஸ்) சென்னை–9**
**சம்பளக் கணக்கு அலுவலர், (தெற்கு), சென்னை–35**
**மாநில முதன்மைக் கணக்காயர் (உள் தணிக்கை) சென்னை.**

**நகல்**

**தொழிலாளர் நல அமைச்சரின், முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.**
**முதன்மைச் செயலரின் தனிச்செயலர், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, சென்னை.9.**
**தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (எப்) துறை, சென்னை.9.**
**தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (அ.ந.மு.1/கணினி அறை பொறுப்பாளர்) துறை, சென்னை - 9**
**இருப்புக்கோப்பு / உ.ந.**

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

**பிரிவு அலுவலர்.**